
பக்கங்கள்:-20

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | பங்குனி 13 | புதன்கிழமை | 27.03.2024 | அதிர்வு 239

## ஐ.தே.க. அலுவலகம் மீது கைக்குண்டுத் தாக்குதல்



கொழும்பு – கடவத்தை, எல்தெனிய பகுதியில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகம் மீது நேற்று கைக்குண்டுத் தாக்குதல் 06

# முன்னாள் போராளி அரவிந்தன் கைது!



கொழும்பில் உள்ள பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு நேற்று வாக்குமூலம் வழங்கச் சென்றிருந்த முன்னாள் போராளி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் வசிக்கும் போராளிகள் நலன் புரிச் சங்கத் தலைவர் செல்வநாயகம் அரவிந்தன் (ஆனந்தவர்மன்) என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர், கடந்த 14ஆம் திகதி கொழும்பில் உள்ள பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு வாக்குமூலம் வழங்க அழைக்கப்பட்டிருந்தார்.

எனினும், அன்றைய தினம் அவர் வாக்குமூலம் வழங்கச் செல்லாத காரணத்தால் நேற்று மீண்டும் 06

# சட்டம், ஒழுங்கைப் பேணுவது மனித உரிமை மீறல் அல்ல!

## பல்கலைக்கழக விரிவுரையாளர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி ரணில் எடுத்துரைப்பு





**“போராட்டம் என்ற போர்வையில் வன்முறையை விதைத்தவர்களிடம் இருந்து நாடாளுமன்றம், பிரதமர் அலுவலகம், ஜனாதிபதி அலுவலகம் உள்ளிட்ட அரச சொத்துக்களைக் காப்பாற்றி நாட்டில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட நான் மேற்கொண்ட நடவடிக்கைகளை மனித உரிமை மீறல் எனச் சிலர் சுட்டிக்காட்ட முயன்றனர். இருந்தபோதும், அந்த நடவடிக்கையை அன்று எடுக்காமல் இருந்திருந்தால் இன்று நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையைக் கட்டியெழுப்பியிருக்க முடியாது.”**

**- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.** 07

# எந்தத் தேர்தலையும் எதிர்கொள்ளத் தயார்

## மொட்டுக் கட்சி சூளுரை



நாட்டில் அடுத்து என்ன தேர்தல் நடைபெற்றாலும் அதனை எதிர்கொள்வதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தயாராகவே உள்ளது என்று நீதி இராஜாங்க அமைச்சர் அநுராத ஜயரத்ன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் கண்டி மாவட்ட கூட்டத்தின் 06




‘ஆமைபுகுந்தவீடும், அமீனா புகுந்த வீடும் உருப்படாது’ – என்பார்கள்.

பல சமயங்களில் ஊடக முதலாளிகள் புகுந்த அரசியல் கட்சிகளின் நிலையும் அது தான்.

தமிழரசு கட்சிக்குள் மற்றொரு ஊடக முதலாளியின் புதுவரவு இடம்பெற்றிருக்கின்றது.

யுத்த காலத்தில் வாலைச் சுருட்டிப் பம்மிக் கொண்டிருந்த பலருக்கும் இப்போது அரசியல் செய்ய வாய்ப்பான களமாகி இருக்கின்றது யாழ்ப்பாண அரசியல். அந்த அளவுக்கு சந்தோஷம்தான்.

முதலாளிமார் – குறிப்பாக 06



# இனப்பெருக்க சுகாதாரம், பாலியல் கல்வி குறித்து மாணவர்களுக்கு தெளிவூட்டுவது பற்றிய செயலமர்வு

இனப்பெருக்க சுகாதாரம் மற்றும் பாலியல் கல்வி தொடர்பாகப் பாடசாலை மாணவர்களைத் தெளிவுபடுத்துவதற்காக நாடாளுமன்ற சிறுவர் ஒன்றியத்தின் வழிகாட்டலின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள புத்தகத் தொகுதிகள் மற்றும் டிஜிட்டல் ஊடக நிகழ்ச்சித் தொகுப்புக்கள் குறித்துப் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் ஏனைய தரப்பினரை அறிவுறுத்தும் நிகழ்வு அண்மையில் நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.

நாடாளுமன்ற சிறுவர் ஒன்றியத்தின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இவ்விடயத்துடன் தொடர்புபட்ட அரசாங்க அதிகாரிகள், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, நாடாளுமன்ற சபை முதல்வரும் கல்வி அமைச்சருமான சுசில் பிரேஜயந்த, சுகாதார இராஜாங்க அமைச்சர் (வைத்தியகலாநிதி)சீதா அரம்பேபொல உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இனப்பெருக்க சுகாதாரம் மற்றும் பாலியல் கல்வி தொடர்பில் பாடசாலை மாணவர்களையும் சமூகத்தையும் தெளிவுபடுத்த ரோஹினி விஜேரத்ன தலைமையிலான நாடாளுமன்ற சிறுவர் ஒன்றியத்தின் வழிகாட்டிலின் கீழ் சுகாதார அமைச்சு, கல்வி அமைச்சு, சிறுவர் விவகாரம் மற்றும் பெண்கள் வலுவூட்டல் அமைச்சு ஆகியவற்றின் பிரதிநிதித்துவத்துடன் விசேட குழுவொன்று அமைக்கப்பட்டது. இந்தக் குழுவுடன் மேலும் சில அரசாங்க நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் துறைசார் நிபுணர்கள் உள்ளிட்ட தரப்பினர் இணைந்து இந்தப் புத்தகங்கள் மற்றும் டிஜிட்டல் ஊடக நிகழ்ச்சித் தொகுப்புக்கள் தயாரித்தனர். இவை கடந்த மார்ச் 07ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டன.

இங்கு உரையாற்றிய நாடாளுமன்ற சிறுவர் ஒன்றியத்தின் தலைவர் ரோஹினி குமாரி விஜேரத்ன, இனவிருத்தி சுகாதாரம் மற்றும் பாலியல் கல்வி தொடர்பான புத்தகத் தொகுதிகளையும், டிஜிட்டல் ஊடக நிகழ்ச்சித் தொகுப்புக்களையும் அறிமுகப்படுத்துவது முழு நாட்டிற்கும் கிடைத்த வெற்றியாகும். இந்நாட்டில் அதிகரித்து வரும் சிறுவர் துஷ்பிரயோகங்களை எதிர்கொண்டு சிறுவர்களுக்கும் சமூகத்திற்கும் கல்வி கற்பிக்க வேண்டும் என்றார்.

பல வருடங்களுக்கு முன்னர் துறைசார் மேற்பார்வைக் குழுவின் ஊடாக இதனை மேற்கொள்வதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்ததாகவும், பல்வேறு தடைகள் காரணமாக அதனை நிறைவேற்ற முடியாமல் போனமையையும் அவர் நினைவுகூர்ந்தார். மேலும், இது பெருந்திரளான மக்களின் முயற்சியால் நிறைவேற்றப்பட்ட பணி என்பதால், அவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, சிறுவர் மற்றும் பெண்களின் உரிமைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி அரசமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் உள்ளடக்கப்பட வேண்டுமெனச் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், இது காலத்தின் தேவையுடன் கூடிய சிறந்த வேலைத்திட்டம் எனவும், அதற்காக ரோஹினி விஜேரத்ன தலைமையிலான அனைத்து தரப்பினருக்கும் தனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறார் எனவும் கூறினார்.

அத்துடன், காலத்தின் தேவையாக இருக்கும் இப்புத்தகங்களை அச்சிட்டு மாணவர்களுக்கு இலவசமாக வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக சபை முதல்வரும் கல்வி அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். இந்தப் பணிகளை நிறைவேற்ற தலையிட்ட நாடாளுமன்ற சிறுவர் ஒன்றியத்தின் உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் கௌரவத்தைத் தெரிவித்தார்.

இங்கு கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட பாடநூல்களும் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் கல்வி அமைச்சருக்கு வழங்கி வைக்கப்பட்டது. அத்துடன் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட பாடநூல்கள் தொடர்பான அறிமுகமும் இடம்பெற்றது. அதன்படி, வயது 11 வயது முதல் நான்கு வயதுப் பிரிவுகளுக்கு இந்தத் புத்தகத் தொகுதிகள் வழங்கப்பட்டுள்ளன. சுகாதார அமைச்சினால் வழங்கப்படும் டிஜிட்டல் ஊடக நிகழ்சித் தொகுப்புக்களும் அறிமுகப் படுத்தப்பட்டன.

அதன்படி, சிறுவர்கள் மற்றும் சமூகத்தில் விழிப்புணர்வை அதிகரிக்க ஞசு குறியீட்டைப் பயன்படுத்தி முகப்புத்தகம், யூடியூப், எக்ஸ், டிக் டொக் மற்றும் ஏனைய சமூக ஊடகங்கள் மூலம் குறுகிய வீடியோ நிகழ்ச்சிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

# வடக்கில் 2023 இல் 52 பேர் படுகொலை

வடக்கு மாகாணத்தில் கடந்த ஆண்டு மாத்திரம் 52 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகக் கோரப்பட்டதற்கு அமைவாக வழங்கப்பட்டுள்ள பதிலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கில் 52 பேர் கடந்த ஆண்டு கொலை செய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 19 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 13 பேரும், முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் தலா 8 பேரும், மன்னார் மாவட்டத்தில் 4 பேரும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி படுகொலைகள் தொடர்பில் சந்தேகத்தில் 129 பேர் கைதாகியுள்ளனர். இவர்களில் 38 பேர் மாத்திரம் நீதிமன்றத்தின் ஊடாகப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

# டிஜிட்டல் பொருளாதார பரிவர்த்தனைக்கான சட்டம் இந்த வருடம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்

## டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பு வசதிகள் மாநாட்டில் ஜனாதிபதி தெரிவிப்பு












"டிஜிட்டல் பரிவர்த்தனைக்கான முகவர் நிலையம் மற்றும் செயற்கை நுண்ணறிவுக்கான மையத்தை உருவாக்குவதற்கான சட்டங்கள் இந்த வருட நடுப்பகுதிக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நேற்று இடம்பெற்ற டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பு வசதிகள் மாநாட்டில் பிரதான உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்திய உயர்ஸ்தானிகராலயமும் தொழில்நுட்ப அமைச்சும் இணைந்து இந்த மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தன.

டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நிர்வாகம் தொடர்பில் பல்வேறு துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் அறிவும் அனுபவமும் கொண்ட பல இந்திய மற்றும் இலங்கை நிபுணர்கள் இதில் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டில் ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில் –

"நாட்டின் பொருளாதார மாற்றத் திட்டத்தை இலகுபடுத்தும் வகையில் புதிய நிறுவன கட்டமைப்பொன்றை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளோம். தகவல் தொழில்நுட்ப சபை போன்ற தற்போதுள்ள கட்டமைப்புகளில் இருந்து விலகி, டிஜிட்டல் மாற்றத்திற்கான முகவர் நிலையம் மற்றும் செயற்கை நுண்ணறிவுக்கான மையத்தை உருவாக்குவதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்காக 2024 வரவு – செலவுத் திட்டத்தில் இருந்து ஒரு பில்லியன் ரூபாவை ஒதுக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

விவசாயத்தை நவீனமயமாக்குவது, வறுமையை நிவர்த்தி செய்வது மற்றும் கல்வி முறையை சீர்திருத்துவது போன்றவற்றில் டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. வறுமையைக் குறைக்கும் தேசிய இலக்குடன் அரசாங்கம் செயற்படுகிறது. 2035 ஆம் ஆண்டளவில் இலங்கை மக்களில் வறுமை 10 வீதத்தை தாண்டாது என்பதை உறுதிப்படுத்துவது எமது நோக்கமாகும்.

இந்த பொருளாதார நோக்கங்களை அடைவதில் வலுவான நிறுவனக் கட்டமைப்பை நிறுவுதல் மற்றும் துல்லியமான தரவுகளை சேகரிப்பது முக்கியமானவை. இந்தத் தரவுகள் ஊடாக கல்வி, சுகாதாரம் மற்றும் வருமான மட்டங்கள் போன்ற பல்வேறு பரிமாணங்களைக் கருத்தில் கொண்டு தீர்வுகளை அளிக்க வேண்டும்.

உத்தேச முகவர் நிறுவனத்தை செயல்படுத்தும் வகையில் இந்த ஆண்டின் நடுப்பகுதிக்குள் அதற்கான சட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்க்கிறோம். குறிப்பாக இந்து சமுத்திரப் பிராந்தியம் ஒரு பாரிய வளர்ச்சிப் பிராந்தியமாக உருவாகி வருவதால், இலங்கை போட்டிப் பொருளாதாரமாக மாறுவதற்கு இந்த சட்டவாக்க மற்றும் கொள்கை கட்டமைப்பு மிகவும் முக்கியமானது.

இத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் பாடசாலை மற்றும் உயர்கல்வி மட்டத்தில் கல்வி முறைமை பலப்படுத்தப்பட வேண்டும். அடுத்த ஐந்து ஆண்டுகளில் பாடசாலைகளுக்கு செயற்கை நுண்ணறிவை அறிமுகப்படுத்துவது பிரதான திட்டமாகும். மேலும் ஐந்து முதல் எட்டு ஆண்டுகளில் அனைத்துப் பாடசாலையையும் இந்தத் திட்டத்தில் ஈடுபடுத்தி பல்கலைக்கழகங்கள் வரை இதனை விரிவுபடுத்த எதிர்பார்க்கிறோம்.

இலங்கையின் டிஜிட்டல் பொருளாதாரத்தை முன்னேற்ற இந்திய நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட நாம் எதிர்பார்க்கிறோம். குறிப்பாக, சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் கிளையை எமது நாட்டில் நிறுவுவதற்கும் அவர்களின் நிபுணத்துவ அறிவைப் பயன்படுத்தி இரண்டு தொழில்நுட்பப் பல்கலைக் கழகங்கள் உட்பட மூன்று பல்கலைக்கழகங்களை இங்கு முன்னெடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பொருத்தமான மூலோபாயங்களைப் பின்பற்றி இலங்கையின் அபிவிருத்தித் திட்டத்தை விரைவுபடுத்துவதற்கு இந்திய நிபுணத்துவத்தைப் பயன்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த திட்டங்களை செயல்படுத்த கூட்டு ஒத்துழைப்பு அவசியம். 21ஆம் நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் இலங்கையை தயார்படுத்துவதில் நவீனமயமாக்கலைத் தழுவ வேண்டிய அவசரத் தேவை உருவாகியுள்ளது." – என்றார்.

# மைத்திரியின் கருத்துக்காக சு.கவை அவதூறு செய்வதா?

## கண்டிக்கின்றது அக்கட்சி

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தவிசாளர் மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு, தம்மையும் தமது கட்சியையும் அவதூறு செய்யும் முயற்சியை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் சாரதி துஷ்மந்த மித்ரபால தெரிவித்துள்ளார்.

தமது கட்சியின் தவிசாளர் மைத்திரிபால சிறிசேன கண்டியில் கடந்த 22 ஆம் திகதி ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்து தொடர்பில் விசாரிக்கக் குற்றவியல் விசாரணை திணைக்களம் நேற்று முன்தினம் அழைப்பு விடுத்திருந்ததாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தமது அறிக்கையில் குறிப்பிட்டார்.

இதற்கிணங்க, வாக்குமூலம் வழங்கப்பட்டுள்ளதுடன், அந்த வாக்குமூலத்தின் உள்ளடக்கம் தொடர்பில் பிரதான ஊடகங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் உண்மைக்கு புறம்பான திரிவுபடுத்தப்பட்ட தகவல்கள் வெளியாகி வருகின்றன என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றவியல் விசாரணை திணைக்களத்திற்கு வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில், விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ் அத்தியசட்கருமான சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

ஐந்து மணித்தியாலங்களுக்கு மேலாக பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், குற்றவியல் விசாரணை திணைக்களத்திடம் மைத்திரிபால சிறிசேன வழங்கிய வாக்குமூலம் தமக்கு இதுவரை கிடைக்கவில்லை என சிரேஷ்ட பிரதி பொலிஸ் அத்தியசட்கர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

# டிஜிட்டல் பரிவர்த்தனை முகவர் நிலையத்தை உருவாக்குவது தொடர்பில் இந்தியா ஈடுபாடு

## இலங்கைக்கான தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவிப்பு




டிஜிட்டல் பரிவர்த்தனைக்கான முகவர் நிலையத்தை உருவாக்குவது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளோம் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்டிருந்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஜி 20 அமைப்பின் தலைமைப் பதவிக்கு இந்தியா தெரிவு செய்யப்பட்டுள்ளமையால், டிஜிட்டல் பரிவர்த்தனைக்கான முகவர் நிலையத்தை உருவாக்குவதற்கு தயாராகியுள்ளது. அதனை ஸ்தாபிப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதனூடாக அரசாங்கங்கள், தனியார்துறை , கல்வித்துறை, கடன் நிறுவனங்கள், சிவில் சமூகம் உள்ளிட்ட ஏனைய அனைத்து தரப்பினரும் ஒருங்கிணைந்த டிஜிட்டல் கட்டமைப்புடன் இணைந்து செயற்பட முடியும்.” - என்றார்.

டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பு வசதிகள், நிர்வாகம் தொடர்பான மாநாடு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது.

# வட்டி வீதங்கள் குறைவடையும் மத்திய வங்கி ஆளுநர் உறுதி!

கொள்கை வட்டி வீதங்கள் குறைக்கப்பட்டதன் மூலம் வங்கி வட்டி வீதங்களும் குறைவடையும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

வங்கிகளுடனான பரிவர்த்தனைகளின் போது, மத்திய வங்கி அறவிடும் வட்டி வீதங்கள் அல்லது கொள்கை வட்டி வீதங்களை 50 அடிப்படை புள்ளிகளால் அல்லது 5 சதவீதத்தால் குறைப்பதற்கு நேற்று முன்தினம் கூடிய மத்திய வங்கியின் நாணயச்சபை தீர்மானித்தது.

இந்த தீர்மானத்தின் பின்னணியில் உள்ள விடயங்களை விளக்குவதற்காக ஊடகவியலாளர் சந்திப்பொன்றை மத்திய வங்கி நேற்று ஏற்பாடு செய்திருந்தது.

பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த தேவை தொடர்ந்தும் குறைந்த மட்டத்தில் இருப்பதாலும் பணவீக்கம் எதிர்பார்த்த மட்டத்தில் உள்ளதாலும் வெளிநாட்டுத் துறையின் தாக்கம் குறைவடைந்ததாலும் கொள்கை வட்டி வீதங்களைக் குறைக்கத் தீர்மானித்தோம் என மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க இதன்போது குறிப்பிட்டார்.



# தேசிய உயர்கல்வி அபிவிருத்தி ஆணைக்குழுவை அமைக்கும் பணி துரிதப்படுத்தப்பட்டு வருகிறது

## உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தகவல்



“பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குப் பதிலாக தேசிய உயர்கல்வி அபிவிருத்தி ஆணைக்குழுவை அமைப்பதற்கான, முன்னாள் பிரதம நீதியரசர் கே.ஸ்ரீபவன் தலைமையிலான குழுவின் அவதானிப்புகள் அடங்கிய அறிக்கை அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான அறிக்கையை ஆராய்ந்த பின்னர் தேசிய உயர்கல்வி அபிவிருத்தி ஆணைக்குழுவை இவ்வருடத்தில் நிறுவ முடியும்.”

– இவ்வாறு உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“2021-2022 ஆம் ஆண்டைப் பொறுத்தவரை, உயர்தரத்தில் சித்தி பெற்ற மாணவர்கள் 17 பல்கலைக்கழகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளனர். ஆனால் அந்த வருடங்களில் திட்டமிட்டபடி மாணவரை இணைக்கும் பணி நடக்கவில்லை என தகவல்கள் வெளியாகி வருகின்றன. ஆனால் அந்த தகவல்கள் அனைத்தும் பொய்யானவை என்பதை உறுதிப்படுத்த உரிய ஆவணங்கள் என்னிடம் உள்ளன.

கடந்த காலத்தில் ஏற்பட்ட சில சிக்கல்களினால் சில பல்கலைகழகங்களின் இறுதியாண்டு மாணவர்கள் சரியான நேரத்தில் படிப்பை முடிக்க முடியாமல் இன்னும் பல்கலைகழகங்களில் தங்கி உள்ளனர். விரிவுரைகள் மற்றும் நடைமுறைக் கற்கைகளை நடத்துவதற்குத் தேவையான வகுப்பறை வசதிகள் இல்லாமல் இருக்கின்றன.

ஆனால், இந்த சிக்கல்களை தீர்க்க சில மாற்று வழிகளை நாம் தேர்ந்தெடுத்துள்ளோம். இரத்மலானை பிரதேசத்தில் இருந்து மகாவலிக்கு சொந்தமான கட்டடமும், களனி பிரதேசத்தில் இருந்து அரசாங்கத்திற்குச் சொந்தமான பல கட்டடங்களும் எமக்கு கிடைத்துள்ளன. இந்த கட்டடங்கள் புனரமைக்கப்பட்டவுடன் இந்தப் பிரச்சினைகள் தீரும் என நம்புகிறோம்.

மேலும் இங்கு விசேடமாக குறிப்பிட வேண்டிய ஒன்று உள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்குப் பதிலாக தேசிய உயர்கல்வி அபிவிருத்தி ஆணைக்குழுவும் அமைக்கப்பட உள்ளது.

இது தொடர்பில், முன்னாள் பிரதம நீதியரசர் கே.ஸ்ரீபவன் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவின் அவதானிப்புகள் அடங்கிய அறிக்கை நேற்று அமைச்சிடம் கையளிக்கப்பட்டது.

அந்த அறிக்கையை ஆய்வு செய்த பிறகு, இந்த ஆண்டுக்குள் தேசிய உயர்கல்வி அபிவிருத்தி ஆணைக்குழுவை அமைப்பது சாத்தியப்படும் என்று நம்புகிறேன். இது இந்நாட்டின் பல்கலைக்கழக முறைமை மாற்றத்திற்கு இன்றியமையாத நிறுவனம் என்பதைக் கூற வேண்டும்.” – என்றார்.

# வெடுக்குநாறி சிவனாலயத்தில் கைதானவர்கள் மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு

## வவுனியா அலுவலகத்தை நிராகரித்து கொழும்பில் புகார்






(கே.வசந்தன்)

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் கைதான எட்டுப்பேரில் 6 பேர் நேற்று கொழும்பிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமைக் காரியாலயத்தில் முறைப்பாடுகளை மேற்கொண்டனர்.

வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரியின் செயற்பாடுகள் தமிழர்களுக்கு எதிரான இனவாத ஒடுக்குமுறைகளை மேற்கொள்ளும் இலங்கைப் பொலிஸாருக்குத் துணைபோகின்றவையாக அமைந்துள்ள காரணத்தினாலேயே கொழும்பில் முறைப்பாடு செய்யப்பட்டதாக முறைப்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்தில் மனித உரிமை விவகாரங்களுக்குப் பொறுப்பான அதுகாரியையும் நேரில் சந்தித்து, சிவராத்திரி தினத்தில் வெடுக்குநாறிமலை ஆதி இலிங்கேஸ்வரர் ஆலயத்தில் பொலிஸார் மேற்கொண்ட அராஜகங்கள் மற்றும் கைதுகள், துன்புறுத்தல்கள், அடிப்படை வசதிகளற்ற சிறையில் அடைத்துவைக்கப்பட்டமை தொடர்பில் எடுத்துக் கூறப்பட்டது.

மேலும் வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு ஆணையாளரது பக்கச் சார்பானதும் நம்பகமற்றதுமான செயற்பாடுகளும் சுட்டிக் காட்டப்பட்டன.

அதிகாரத் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட பொலிஸா மீது குற்றவியல் நடவடிக்கை எடுத்துத் தண்டிக்க வேண்டும் என்பதுடன் எதிர்காலத்தில் இடையூறுகள் இன்றி ஆலய வழிபாடுகளில் ஈடுபடுவதற்கான சூழல் உறுதிப்படுத்தப்படல் வேண்டுமெனவும் கோரி மகஜர் ஒன்றும் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஊடகங்களைத் தமது ஊதுகுழல்களாக வைத்திருக்கும் முதலாளிமார் – அரசியலை இலக்கு வைத்துக் காய் நகர்த்தும் போது அது கரவாகப் பார்க்கப்படுவது தவிர்க்க முடியாததுதான். அதற்காக எடுத்த எடுப்பில் எல்லா முதலாளிமாரையும் வைவதும் கூட சரியான அணுகுமுறை அல்ல.

இப்போது ஒரு பெரும் ஊடக முதலாளியின் அங்கத்துவ விண்ணப்பப் படிவத்தைக் கட்சியின் பொருளாளர் எடுத்துக் கொண்டு வந்திருக்கின்றார். நிர்வாகச் செயலாளரிடம் அதை ஒப்படைத்து இருக்கின்றார்.

"இவர்.... பெருமுதலாளியாயிற்றே...?" என்று இழுத்திருக்கின்றார் நிர்வாகச் செயலாளர்.

"ஓம்.. ஓம்... அவர்தான் தேசிய மாநாட்டுக்கு பத்து லட்சம் ரூபா அன்பளிப்புத் தந்தவர்" – என்று பதிலளித்திருக்கிறார் பொருளாளர்.

நல்லது. மாகாண சபைக்கு மற்றொரு போட்டித் தலை வந்திருக்கின்றது. 'சபாஷ்! சரியான போட்டியாகவும் நல்ல ரேட் ஆகவும் இருக்கும்' என்று மாவையர் மகிழலாம்.

தலைவர் தெரிவில் சிறீதரனின் வெற்றியோடு வந்திருக்கும் புதுவரவு. வரவேற்போம்.

அதுவல்ல விடயம். இந்த வரவுகள் தந்த கணக்குகள் எல்லாம் கட்சியின் கணக்கு வழக்கில் காட்டப்பட்டால் சந்தோஷம்.

வரவு – செலவு என்றதும் ஒரு விடயம் நினைவுக்கு வருகிறது.

கட்சியின் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட 'புதிய சுதந்திரன்' பத்திரிகையை தனியார் ஒருவர் தன் சொத்தாக்கி கொண்டு விட்டார், அதனால் கட்சியில் சீற்றம் என்று பெயர் குறிப்பிடாமல் நேற்று எழுதி இருந்தேன்.

அதை ஒட்டி நண்பர் அகிலகுமாரன் முத்துக்குமாரசுவாமி (அகிலன்) இரண்டு ஆவணங்களை வட்ஸ் அப் செய்திருந்தார்.

அந்தப் பத்திரிகையை அச்சிடுவதற்காக தமக்கு 40 லட்சம் ரூபா வரை கட்சித் தரப்புகளினால் வரவு வந்ததாகக் காட்டியிருந்தார். தாம் அதற்கு 78 லட்சம் ரூபா வரை செலவிட்டிருக்கிறார் என அவர் குறிப்பிட்டு இருக்கின்றார். மேலதிகமாக 38 லட்சம் ரூபா கட்சியிலிருந்து இன்னும் அவருக்கு வர வேண்டும் என்பது அவர் கணக்குப் போல.

அந்தப் பணத்தை வழங்கும்படி கேட்டுக் கடந்த 18 ஆம் திகதி அவர் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்.

சரி இனி விடயத்துக்கு வருவோம்.

1. 'புதிய சுதந்திரன்' கட்சிப் பத்திரிகை என்றால் இவ்வளவு பணமும் கைமாறிய கணக்கு, இப்போது ஊடக முதலாளியிடம் இருந்து தேசிய மாநாட்டுக்கு பத்து லட்சம் ரூபா பெற்றுக் கொடுத்த கட்சி பொருளாளரிடம் இருக்குமோ தெரியவில்லை. அப்படி இல்லாமல், வழமை போல தேசிய மாநாட்டில் கணக்குக் காட்டியதாக விடும் கணக்கு, இதிலும் விடப்படுமா? தெரியவில்லை.

2. இத்துணை நிதி வரவு – செலவு பத்திரிகை தரப்பில் செலவிட்டமை பற்றிய விவரங்கள் ஏதும் பொருளாளருக்கு தெரியுமா? கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கு ஏதும் அவரிடம் உண்டா? அல்லது அகிலனின் கணக்கே அவர் கணக்கா? ஆண்டவனுக்குதான் வெளிச்சம்.

3. கட்சித் தலைவரிடம் அச்சிட்ட பத்திரிகைக்கும் விநியோகத்துக்கும் நிலுவைப் பணமாக 38 லட்சம் ரூபா கோருகின்றார் அகிலன். அதை கட்சி கொடுக்காத நிலையில் பத்திரிகையைத் தமதாக்கி அவர் தொடர்ந்து அதை தன் பெயரில் வெளியிடுகின்றார். அவரது நிலைப்பாட்டின்படி, அவர் கட்சியிடம் அச்சிட்ட நிலுவைப் பணத்தைக் கோருவதால் பத்திரிகை கட்சியினுடையது. அப்படி இருக்க, இப்போது அதனை (பத்திரிகையை) தன்னுடையதாக அவர் மாற்றியிருக்கின்றார். ஒருபுறம் தாம் நிலுவையாக உள்ளது என்று குறிப்பிடும் பணத்தைக் கேட்டுக் கொண்டு, மறுபுறம் பத்திரிகையையும் அவர் தமதாக்கியது எங்ஙனம் என்பது புரியவில்லை. You can't have your cake and eat it என்பது அவருக்குப் புரியவில்லைப் போலும்.

4. இதற்கிடையில் கட்சியின் பத்திரிகையை நீங்கள் வெளியிடக்கூடாது என கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் கூடிய கட்சியின் அரசியல் குழு முடிவு எடுத்து, தடை விதித்து, அதனை அகிலன் முத்துக்குமாரசுவாமிக்கு எழுத்தில் அறிவிக்கின்றது.

அப்படி இருக்க, அந்தப் பத்திரிகைக்கு – கட்சியை மீறி வெளியிடப்படும் அந்த வெளியீட்டை நிறுத்தும்படி கட்சி உத்தரவிட்ட அந்தப் பத்திரிகைக்கு – கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா நேற்றும் 'எக்ஸ்குளூசிவ்' (பிரத்தியேக) பேட்டி அளிக்கின்றார். அது கட்சித் தடையை மீறிப் பிரசுரமாகும் அந்த இதழில் இன்று பிரசுரமாகிறது. இதைத்தான் மாவையின் 'பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டும் வேலை' என்று நேற்று நான் அம்பலப்படுத்தி இருந்தேன்.

5. அந்த 'எக்ஸ்க்ளூசிவ்' பேட்டியில் கட்சியின் பொதுக்குழுவில் 350 பேர் வாக்களித்தமை யாப்புப்படி சரி என்ற மாதிரி வியாக்கியானம் தெரிவித்திருக்கிறார் மாவை.

அன்று நீதிமன்றத்தில் அப்படி அதிகமானோர் வாக்களித்தமை யாப்புப் பிழை என்று எழுதிக் கொடுத்து கையெழுத்திட்டு வந்த மாவைக்கு, இப்போது அதை மறுக்கும் சட்ட ஞானம் எங்கிருந்து பிறந்து இருக்கின்றது? நீதிமன்றத்தில் பதிலளித்த போது தன்னிலை மறந்திருந்தாரோ என்னவோ!

கடைசியாக நடந்த கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் சுமந்திரன் அடித்த லெக்ஸரின் பகுதி விளக்கம்தான் அவரின் தற்போதைய வியாக்கியானம் என்று தோன்றுகின்றது.

அவற்றின் விவரத்தை நாளை பார்ப்போம்.

## முன்னாள் போராளி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அழைக்கப்பட்டிருந்தார்.

விடுதலைப்புலிகளை மீளுருவாக்கம் செய்யும் வகையில் முகநூலில் அவர் பதிவிட்டிருந்தார் என்று பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

## எந்தத் தேர்தலையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அத்துடன், இடதுசாரிக் கட்சிகள் தேர்தலின்போது ஒன்றுபட வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார்.

மே தினக் கூட்டத்துக்கான ஏற்பாடுகள் பற்றியே இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது என்றும் இராஜாங்க அமைச்சர் கூறினார்.

அதேவேளை, இதன்போது கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மே தினக் கூட்டம் கொழும்பு – கெம்பல் பார்க் மைதானத்தில் நடைபெறும் என்று தெரிவித்தார்.

## ஐ.தே.க. அலுவலகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கட்சி அலுவலகத்தின் மீது வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டே வீசப்பட்டுள்ளது.

அரசியல் பழிவாங்கல் காரணமாக இந்தக் கைக்குண்டு தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது, கட்சி அலுவலகத்துக்கு முன்பாக உள்ள வீதியில் கைக்குண்டு ஒன்றும், கட்சி அலுவலகத்துக்குள் கைக்குண்டு ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டாலும், குண்டு வெடிக்காததால், நடக்கவிருந்த அழிவு தவிர்க்கப்பட்டுள்ளது என்றும், கட்சி அலுவலகம் மீது சிலர் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸ் விசாரணை அதிகாரிகள் குழுவினர், தாக்குதல் மேற்கொண்ட சந்தேக நபர்களைக் கைது செய்ய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவித்தனர்.

மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கபில கடுப்பிட்டிய ஏ.ஜே.பி.கிரிஷாந்தவின் பணிப்புரையின் பிரகாரம் கடவத்தைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# சட்டம், ஒழுங்கைப்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடினமான மற்றும் விரும்பத்தகாத யுகத்தின் பின்னர் ஒரு நாடாக முன்னோக்கி செல்லும் பயணத்தில் சட்டம், ஒழுங்கைச் சீர்குலைக்க இடமளிக்கக் கூடாது என வலியுறுத்திய ஜனாதிபதி, ஒவ்வொரு துறையிலும் சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்கும் பொறுப்பு சகல தரப்பினருக்கும் இருக்கின்றது எனவும் சுட்டிக்காட்டினார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களுடன் நேற்றுமுன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார வேலைத்திட்டம் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் குறித்து கலந்துரையாடும் நோக்குடன் முன்னாள் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் இந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுகையில்,

"நாட்டுக்கு புதிய கல்வி முறையை அறிமுகப்படுத்த அரசு செயற்பட்டு வருகின்றது. அதற்காகப் பிரதமரின் செயலாளர் தலைமையில் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைச் சுமையைக் குறைத்து பாடசாலை கல்வியில் மேற்கொள்ளப்படவுள்ள மாற்றங்கள் தொடர்பில் அரசின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பல்கலைக்கழகக் கட்டமைப்பில் பல மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எதிர்வரும் தேர்தலின் பின்னர் புதிய நாடாளுமன்றத்தின் கீழ் அந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படும்.

இந்த வேலைத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு அனைவரினதும் ஆதரவு தேவை. 2035 ஆம் ஆண்டளவில் நாட்டில் உயர்தரத்திலான கல்வி முறையை உருவாக்குவதே நமது நோக்கமாகும்

இந்த நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு பல்கலைக்கழகக் கட்டமைப்பில் நல்லதொரு சூழல் இருக்க வேண்டும். பல்கலைக்கழக நிர்வாகத்தை வெளித் தரப்பினருக்கு வழங்குவதா அல்லது மாற்றங்களை மேற்கொண்டு பல்கலைக்கழகக் கட்டமைப்பில் புதிய சூழலை உருவாக்க வேண்டுமா என்பதை பல்கலைக்கழகங்களே தீர்மானிக்க வேண்டும்.

அண்மையில் களனிப் பல்கலைக்கழகத் திறப்பு விழாவில் நான் கலந்துகொண்ட போது சிலர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த போதிலும், எனக்கு வழங்கப்பட்ட பொறுப்பையும் கடமையையும் நிறைவேற்ற நான் தவறவில்லை." - என்றார்.

கல்வித்துறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய பல சீர்திருத்தங்கள் குறித்து பல்கலைக்கழக பேராசிரியர்கள் கருத்துரைத்தமையோடு, பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் உள்ளிட்ட ஏனைய புத்திஜீவிகளால் அறிவை உருவாக்குதல், அந்த அறிவைப் பகிர்ந்தளித்தல், நாட்டின் தேசிய தேவைகளை நிறைவேற்றுதல் போன்ற சேவைகள் நிறைவேற்றப்படுகின்றன என இதன்போது வலியுறுத்தப்பட்டது.

பல்கலைக்கழகக் கட்டமைப்பை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் இருந்து பிரித்து சுயாதீன கல்வி நிறுவனங்களாக மாற்றுதல், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள மாணவர்களுக்கு இன்றைய மாணவர்களின் தேவைக்கேற்ப தனித்துவமான தொழில்நுட்பத்துடன் கூடிய புதிய கற்கைநெறிகளை கற்க வாய்ப்புக்களை வழங்குதல் மற்றும் அதற்காகப் பல்கலைக்கழகக் கட்டமைப்பில் தேவையான சூழலை ஏற்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், பல்கலைக்கழகக் கட்டமைப்பை முழுமையாக மறுசீரமைத்து பொருளாதார வளர்ச்சிக்குப் பெருமளவில் பங்களிக்கும் நிறுவனங்களாக மாற்றுவதன் முக்கியத்துவம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

















நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மைத்திரியின் வாக்குமூலம்

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திடீரென போட்ட அதிரடிக் குண்டு இலங்கையில் தேசிய மட்டத்தில் அதிர்ச்சிகளை ஏற்படுத்தி இருக்கின்றமை வாஸ்தவம்தான்.

அதன் விவரங்கள் மேலும் வெளியாகும் போது, அது தேசியமட்டத்தையும்தாண்டி, சர்வதேச அதிர்ச்சியாக - குழப்பமாக - மாறக்கூடியதான ஏது நிலைகள் தென்படுகின்றன எனக் கொழும்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

2019 இல் நடத்தப்பட்ட ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதல்களின் சூத்திரதாரிகள் பற்றிய முக்கிய விடயம் தனக்குத் தெரியும் என்று சுமார் ஐந்து ஆண்டுகள் கழித்து அதிரடித் தகவல் ஒன்றை, ஐந்து நாள்களுக்கு முன்னர் பகிரங்கமாக வெளியிட்டுப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார் அந்தக் குண்டுத் தாக்குதல் சமயத்தில் நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியில் இருந்த மைத்திரிபால சிறிசேன.

அவரது கருத்து வெளிப்பாடு பெரும் தேசிய சர்ச்சையை ஏற்படுத்தியது. பயங்கரவாதத் தாக்குதல் பற்றிய தகவல்கள், உள்சூக்குமங்கள் அறிந்திருந்தும், அவை பற்றி பொலிஸாருக்குத் தெரிவிக்காமல் இருக்கின்றமை பெரும் குற்றம் என்று மைத்திரிக்கு எதிராக எல்லா மட்டங்களில் இருந்தும் குரல் எழும்ப தொடங்கியதும், அந்த விடயங்களை மூன்று வாரங்களுக்கு முன்னர்தான் தாம் அறிந்து கொண்டார் என்று ஒரு புது விளக்கத்தை முன் வைத்தார் மைத்திரி.

அவரது கருத்து வெளிப்பாடு எழுப்பிய பலத்த சர்ச்சையை அடுத்து, அது தொடர்பில் உடனடியாக விசாரணை செய்யுமாறு அரசாங்கம் குற்றப் புலனாய்வுத்துறைக்கு உத்தரவிட்டது. புலனாய்வுத் துறையினரின் விசாரணைக்கு நேரில் சமுகம் தந்து தாம் ஒத்துழைப்பார் என தெரிவித்த மைத்திரிபால, அதன் பிரகாரம் நேற்று முன்தினம் குற்றப் புலனாய்வுப் பிரிவில் நேரில் பிரசன்னமாகி சுமார் ஐந்து மணி நேரம் வாக்குமூலம் அளித்திருக்கிறார்.

வாக்குமூலத்தின் விவரம் பகிரங்கமாக வில்லை. எனினும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக அதன் பிரதி சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

அதன் காரணமாக அந்த வாக்குமூலத்தில் இடம்பெற்றுள்ள விடயங்கள் குறித்து கொழும்பில் அரசல் புரசலாக செய்திகள், விவரங்கள், தகவல்கள் கசியத் தொடங்கியுள்ளன. அவற்றை இப்போதைய நிலையில் உறுதிப்படுத்திப் பகிரங்கப்படுத்துவது சாத்தியமற்றது. சட்ட ரீதியாகவும் சிக்கல்களை தரக்கூடிய விடயமும் கூட.

எனினும், இரண்டு விடயங்களை மட்டும் இப்போதைய மட்டில் கோடி காட்டலாம்.

ஒன்று - குண்டுத்தாக்குதல் சூத்திரதாரி பற்றிய விடயங்கள் மூன்று கிழமைக்கு முன்னர்தான் தமக்குத் தெரிய வந்தன என மைத்திரி கூறி இருக்கின்றார். அவர் அப்படித் தெரியும் என அறிவித்த அந்த நாளுக்கு மூன்று வாரங்கள் முன்னதான காலத்தில்தான் அவர் அமெரிக்காவுக்குச் சென்றிருந்தார். அங்கு குறிப்பிடத்தக்க நிகழ்வு எதுவுமோ அல்லது பிரமுகர்களுடனான சந்திப்போ அச்சமயம் அவருக்கு இருந்ததாகத் தெரியவில்லை. எதற்காக அவர் அமெரிக்கா சென்றார் என்பதும் கூட அச்சமயத்தில் ஆச்சரிய-மான விடயமாகத்தான் பார்க்கப்பட்டது. அங்கு அமெரிக்காவின் புலனாய்வுத் தரப்புகள் மற்றும் தெற்காசிய விடயங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க அதிகாரிகளை அவர் சந்தித்தார் என்றும் தகவல்கள் வெளியாகி இருந்தன. அதன் பின்னர்தான் அவர் நாடு திரும்பி, இந்தக் கதையை அவிழ்த்து விட்டிருக்கின்றார்.

அடுத்தது - குண்டுத் தாக்குதல் தரப்புகளுடன் அயல்நாடு ஒன்றின் உளவுப் பிரிவைத் தொடுத்து மைத்திரி கதை விட்டிருக்கிறார் என்றும் கூறப்படுகின்றது. அந்தச் சமயத்தில் கொழும்பில் பணியாற்றிய தூதரக அதிகாரி ஒருவரின் பெயரும் இந்த வாக்குமூலத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பதாக ஒரு தகவல் உண்டு.

இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தல் சூடு பிடித்திருக்கும் சமயம் இது. உணர்வெழுச்சிகளைத் தூண்டக்கூடிய விடயங்கள் அயல்நாட்டிலிருந்து கிளம்பினாலும் கூட அவை அங்கு பெரும் தலைகீழ் மாற்றங்களை ஏற்படுத்தி விடும் என்பதை மறுக்க முடியாது.

அத்தகைய விடயங்களை சதி நோக்கங்களாகக் கொண்ட உத்தேச சதி வலையின் ஓர் அங்கமாக, சமய சந்தர்ப்பம் பார்த்து மைத்திரி மூலம் சர்வதேச தரப்புக்கள் காய் நகர்த்த எத்தனித்திருக்கக் கூடும்.

ஜனாதிபதியாகப் பதவியில் இருந்த போது கூட உளவுத் தகவல்கள் தெளிவாக இருந்தும், தாக்குதலைத் தவிர்ப்பதற்கு உஷாராக நடவடிக்கை எடுக்கக்கூடிய விழிப்பான தலைவராக இருந்தவர் அல்லர் மைத்திரி. அத்தகையவர் இப்போதும் கூட சர்வதேச மட்டத்தில் கட்டவிழும் சதி வலையில் - பொம்மலாட்டத்தில் - யாராலோ இயக்கப்படும் பொம்மையாக அவர் செயல்பட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

# ‘மிஸ் யுனிவர்ஸ்’ போட்டியில் சவுதி அரேபியா அழகி

மிஸ் யுனிவர்ஸ் அழகிப் போட்டியில் சவுதி அரேபியா அதிகாரப்பூர்வமாக பங்கேற்கிறது.

அந்த நாட்டின் சார்பில் இந்த நிகழ்வில் பங்கேற்கும் முதல் போட்டியாளராக ரூமி அல்கஹ்தானி தேர்வாகியுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அந்த நாட்டின் பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் அல் சவுதின் ஆட்சியின் கீழ் தங்களது பாரம்பரிய வழக்கத்தை கைவிடுத்த நகர்வில் ஒன்றாக இது பார்க்கப்படுகிறது.

27 வயதான ரூமி அல்கஹ்தானி, மிஸ் யுனிவர்ஸ் தான் பங்கேற்பது குறித்த தகவலை திங்கட்கிழமை அன்று இன்ஸ்டாகிராம் சமூக வலைதளத்தில் தெரிவித்திருந்தார்.

“மிஸ் யுனிவர்ஸ் போட்டியில் சவுதி அரேபியாவின் முதல் பங்கேற்பு இது” என அவர் அந்த பதிவில் தெரிவித்துள்ளார்.




# கொள்கலன் கப்பல் மோதி உடைந்தது அமெரிக்க பாலம்





கொள்கலன் கப்பலொன்று மோதியதில் அமெரிக்காவின் மெரிலேண்ட் மாநிலத்தின் போல்டிமோர் நகரில் உள்ள பிரான்சிஸ் ஸ்கொட் கீ என்ற பாலம் உடைந்து வீழ்ந்துள்ளது.

சிங்கப்பூர் கொடியுடன் இலங்கை நோக்கிப் பயணித்த 30 கிலோ மீற்றர் நீளம் கொண்ட டாலி என்ற கப்பலே இவ்வாறு பாலத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

படாஸ்கோ ஆற்றின் குறுக்காக நிர்மாணிக்கப்பட்டு வந்த சுமார் 3 கிலோ மீற்றர் நீளமான பாலமொன்றே இவ்வாறு உடைந்து வீழ்ந்துள்ளது.

இந்த சம்பவத்தையடுத்து பாலத்தில் பணியில் ஈடுபட்டிருந்த சுமார் 7 பணியாளர்கள் காணாமல் போயிருந்தனர். அவர்களில் இருவர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம், பாலத்தின் நிர்மாணப்பணிகளுடன் தொடர்புடைய சில வாகனங்களும் படாஸ்கோ ஆற்றில் விழுந்துள்ளன என போல்டிமோர் நகர தீயணைப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

பல உயிரிழப்புகள் பதிவாகியிருக்கலாம் என அஞ்சப்படுவதுடன், மீட்பு பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், மேற்படி கப்பலில் இருந்த மாலுமிகள் மற்றும் பணிக்குழாமினருக்கு எந்தவித பாதிப்புகளும் ஏற்படவில்லை என அந்த கப்பல் நிறுவனமான சினெர்ஜி மரைன் குழுமம் தெரிவித்துள்ளது.

பாலத்தில் மோதிய கப்பலைச் சுற்றியுள்ள நீரில் அதிகளவில் டீசல் படிவுகள் காணப்படுகின்றன என தீயணைப்பு பிரிவு குறிப்பிட்டுள்ளது.

# மொஸ்கோ இடம்பெற்ற தாக்குதலினை இஸ்லாமிய தீவிரவாதிகளே நடத்தினர்

## ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தகவல்





ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் உள்ள கச்சேரி அரங்கில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தாக்குதலை இஸ்லாமிய பயங்கரவாதிகளே நடத்தினர் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதலுக்கு ஐ.எஸ் அமைப்பு உரிமை கோரியிருந்த போதிலும், இதன் பின்னணியில் உக்ரைன் இருப்பதாக விளாடிமிர் புட்டின் தொடர்ந்தும் குற்றஞ்சாட்டிவந்தார்.

இந்த நிலையில், தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றின் போது இஸ்லாமிய தீவிரவாதிகளே இந்த குற்றத்தை புரிந்துள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், உக்ரைனுக்கும் மேற்கத்தேய நாடுகளுக்கும் சில வகையான தொடர்புகள் உள்ளன என்று அவர் மீண்டும் தெரிவித்துள்ளார். எனினும், அவரது இந்த கூற்றை உக்ரைன் நிராகரித்துள்ளது.

ஐ.எஸ். அமைப்பு தாக்குதலை நடத்தியுள்ள போதிலும் அதற்கான உத்தரவை பிறப்பித்தது யார் என விளாடிமிர் புட்டின் கேள்வி எழுப்பியுள்ளார்.

தாக்குதல் நடத்தியவர்கள் உக்ரைனுக்கு தப்பிச் செல்ல முயன்றனர் என கூறப்படும் கருத்தையும் ரஷ்ய ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

இந்த தாக்குதலுக்கும் உக்ரைனுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று உலகை நம்ப வைக்க அமெரிக்கா முயற்சிக்கிறது எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

# சிவராஜ்குமாரின் படங்களுக்கு தடை தேர்தல் ஆணையத்திடம் வலியுறுத்தல்



மக்களவைத் தேர்தல் நிறைவடையும் வரை கன்னட நடிகர் சிவராஜ்குமாரின் படங்கள் திரையிடுவதற்கு திரையரங்கம், தொலைக்காட்சி, சமூக வலைத்தளங்ளுக்கு தடை விதிக்க வேண்டும் என பா.ஜ.க. கோரியுள்ளது.

இதுதொடர்பாக கர்நாடக பா.ஜ.கவின் ஓ.பி.சி. பிரிவு தலைவர் ராகுல் கவுட்டில்யா தேர்தல் ஆணையத்துக்கு மனு அளித்துள்ளார்.

அந்த மனுவில், “கன்னட நடிகர் சிவராஜ்குமாரின் மனைவி கீதா ஷிமோகா தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராக போட்டியிடுகிறார். அவரை ஆதரித்து சிவராஜ்குமார் அங்கு பிரச்சாரம் செய்ய உள்ளார். இதுமட்டுமல்லாமல் வேறு சில தொகுதிகளிலும் சிவராஜ்குமார் காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் செய்ய இருப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

சிவராஜ்குமார் பிரபலமான நடிகராக இருப்பதால் வாக்காளர்களிடம் கூடுதலாக ஆதிக்கம் செலுத்த வாய்ப்பு இருக்கிறது. இதனால் வேட்பாளர்களிடையே சமநிலையை கடைபிடிக்க முடியாத நிலை ஏற்படும். எனவே மக்களவைத் தேர்தல் நிறைவடையும் வரை சிவராஜ்குமார் நடித்த திரைப் படங்களை திரையரங்கு, தொலைக்காட்சி சேனல்கள், சமூக வலைத்தளங்கள் ஆகியவற்றில் திரையிடுவதற்கு தடை விதிக்க வேண்டும்.” என்று கோரியுள்ளார்.

# முருகன், ஜெயக்குமார், ரொபர்ட் பயஸுக்கு இலங்கை தூதரகம் கடவுச்சீட்டு வழுங்கியது





இந்திய முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்குடன் தொடர்புடைய முருகன், ஜெயக்குமார் மற்றும் ரொபர்ட் பயஸ் ஆகியோருக்கு இலங்கை துணை தூதரகம் கடவுச்சீட்டு வழங்கியுள்ளதாக தமிழக அரசு சென்னை மேல் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் விடுவிக்கப்பட்டு திருச்சி சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள முருகன் தமக்கு அடையாள அட்டை வழங்கக் கோரி சென்னை மேல் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

லண்டனில் உள்ள தமது மகளுடன் வசிப்பதற்காக தாம் விசா பெற போகிறேன் என்றும் அதற்கு விண்ணப்பிக்க வேண்டுமாயின் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை கட்டாயமாகும் எனவும் அவர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, தமக்கு உரிய அடையாள அட்டையை வழங்குமாறு மறுவாழ்வு பணிப்பாளருக்கு உத்தரவிட வேண்டும் எனவும் முருகன் கோரியுள்ளார்.

இந்த நிலையில், மேற்படி மனு மீதான விசாரணை நேற்று, நீதிபதிகளான ஆர்.சுரேஷ் குமார் மற்றும் குமரேஷ் பாபு ஆகியோர் முன்னிலையில் இடம்பெற்றது.

முருகன், ஜெயக்குமார் மற்றும் ரொபர்ட் பயஸ் ஆகிய மூவருக்கும் இலங்கை துணை உயர்ஸ்தானிகரகம் கடவுச்சீட்டு வழங்கியுள்ளதாக தமிழக அரசு சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி இதன்போது தெரிவித்துள்ளார்.

அவர்கள் மூவரையும் இலங்கைக்கு அனுப்புவதற்காக மத்திய அரசிற்கு நேற்று கோரிக்கை கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் மத்திய அரசின் அனுமதி கிடைத்தவுடன் ஒரு வாரத்திற்குள் அவர்கள் இலங்கைக்கு அனுப்பப்படுவார்கள் எனவும் சட்டத்தரணி மன்றுரைத்துள்ளார்.

அத்துடன், எதிர்வரும் ஒரு வாரத்துக்குள் மத்திய அரசு அனுமதி அளிக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சமர்ப்பணங்களை ஆராய்ந்த நீதிபதிகள், இலங்கை உயர்ஸ்தானிகரகத்தால் கடவுச்சீட்டு வழங்கப்பட்டுள்ள நிலையில், அடையாள அட்டை தேவையில்லை என அறிவித்து முருகனின் மனுவை நிறைவு செய்து உத்தரவிட்டனர் என தமிழக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# நகைச்சுவை நடிகர் சேஷு காலமானார்





நகைச்சுவை நடிகர் லட்சுமி நாராயணன் சேஷு மாரடைப்பால் நேற்று காலமானார்.

மாரடைப்பு காரணமாக கடந்த 15 ஆம் திகதி ஆழ்வார்பேட்டையில் உள்ள காவேரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக லட்சுமி நாராயணன் சேஷு அனுமதிக்கப்பட்டிருந்தார்.

தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வந்த அவர், நேற்று வீடு திரும்பிய நிலையில் காலமானார் என இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

60 வதான இவர் பல தமிழ் படங்களில் முக்கிய கதா பாத்திரங்களில் நடித்துள்ளார்.





# மார்ச் - 12 இயக்கத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பில் விசேட ஒன்றுகூடல்

(பழுவூரான்)

மார்ச்- 12 இயக்கத்தின் ஏற்பாட்டில் "தூய்மையான அரசியலுக்கான ஒன்றிணைவோம்" எனும் தொனிப் பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட செயலமர்வொன்று நேற்றுப் செவ்வாய்க் கிழமை மட்டக்களப்பு கல்லடி கிறீன் கார்டன் விருந்தினர் விடுதியில் இடம் பெற்றது.

இச்செயலமர்வில் ஆன்மீகத் தலைவர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள், நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது பதினொரு அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் கலந்து கொண்டு தமது கருத்துக்களைப் பதிவு செய்தனர்.

இக்கருத்தரங்கில் முன்னாள் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான இரா.துரைரத்தினம் மற்றும் பூபாலபிள்ளை பிரசாந்தன், முன்னாள் கிழக்கு மாகாண சபை பிரதித் தவிசாளர் இந்திரகுமார் பிரசன்னா, சமூக செயற்பாட்டாளர் இ.மோகன் உட்பட பலர் பிரசன்னமாகியிருந்தனர்.

இதில் கலந்து கொண்டோரால் மாவட்டத்தில் அபிவிருத்திச் செயற்பாட்டில் அநீதி இழைக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.








# தலவாக்கலையில் 2 ஆசிரியைகள் ஓட்டோவுடன் மோதுண்டு படுகாயம்

(தலவாக்கலை நிருபர்)

ஹட்டன் – நுவரெலியா பிரதான வீதியில் தலவாக்கலை தமிழ் வித்தியாலய பாடசாலைக்கு அருகாமையில் நேற்று முன்தினம் வீதியைக் கடக்க முற்பட்ட பெண் ஆசிரியர்கள் இருவர் மீது அதிவேகமாக பயணித்த ஓட்டோ ஒன்று மோதியதில் இருவரும் பலத்த காயமடைந்து நுவரெலியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

பலத்த காயங்களுக்குள்ளான இருவரும் லிந்துலை பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக நுவரெலியா பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை லிந்துலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ் பல்கலைக்கழகத்தில் இன்று உலக நாடக விழா




யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் அனைத்துலக நாடக விழா இன்று புதன் கிழமை பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் காலை 10 மணி முதல் மாலை 04.00 மணி வரை நடைபெறவுள்ளது.

யாழ் பல்லைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராஜா முதன்மை விருந்தினராகவும் கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ள உலக நாடக தின விழாவில் பல்கலைக்கழக, பாடசாலை மாணவர்களின் நாடகங்கள் மற்றும் தொழில்வாண்மை நாடகக் கலைஞர்களின் நாடகங்கள் இடம்பெறவுள்ளன. பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் இவ்நாடக விழாவில் பங்கேற்க முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.




# கல்முனை வடக்குப் பிரதேச செயலக விவகாரம் இரண்டாவது நாளாகக் கவனவீர்ப்பு முன்னெடுப்பு

**(பாறுக் ஷிஹான்)**

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் மீதான தொடர்ச்சியாக நிர்வாக அடக்குமுறைகளுக்கு எதிராக அங்குள்ள பொதுமக்கள் இரண்டாவது நாளாக நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்தனர்.

அந்தப் பிரதேச செயலகத்தின் முன்பாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை பொதுமக்கள் பல்வேறு சுலோகங்களை உள்ளடக்கிய பதாதைகளை தாங்கிய வண்ணம் அமைதி வழியில் ஒன்று கூடிப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்து இருந்தனர்.

அதன் தொடர்ச்சியாக இரண்டாவது நாளான நேற்றும் பல்வேறு சுலோகங்களை முன்வைத்து போராட்டத்தை அவர்கள் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

இப்போராட்டத்திற்கு வலு சேர்க்கும் முகமாக நேற்று அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் மற்றும் காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் ஆகியோர் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் கடந்த காலங்களில் உதவி அரசாங்க அதிபர் பிரிவாக செயல்பட்டு வந்த மேற்குறித்த பிரதேச செயலகம் 1988 களில் தனியான பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்து 1993 ஆண்டு அமைச்சரவை அங்கீகாரம் பெற்று தனியான பிரதேச செயலகமாக கடந்த 30 வருட காலமாக இயங்கி வருவதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இருந்தபோதிலும் ஒருசில அரசியல்வாதிகள் தொடக்கம் உயர் அதிகாரிகள் வரை இந்தப் பிரதேச செயலகத்தின் மீது நிர்வாக அடக்குமுறைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருவதன் காரணமாக பொது மக்களாகிய தாங்கள் இப்போராட்டத்தை ஆரம்பித்து உள்ளனர் என அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு எதிராக இடம் பெற்று வரும் சூழ்ச்சிகளையும் நிருவாக அடக்குமுறைகளையும் கணடித்தும்-

திட்டமிடப்பட்டு பிரதேச செயலக உரிமைகளை ஒடுக்கும் நிருவாக அடக்குமுறைகளை இனியும் பொறுத்துக்கொண்டு இருக்க முடியாது எனவும்-

அரசாங்கம் இனியும் வாக்குறுதிகளை வழங்கி காலத்தை இழுத்தடிக்காது உடன் தீர்வை தரும் வரை தமது அமைதிப் போராட்டம் தொடரும் எனவும் - மேலும் மக்கள் தெரிவித்தனர்.









## குளங்கள், கிராமங்கள் மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ்

# வவுனியாவில் விவசாயிகளுக்கு தானிய விதைகள் விநியோகம்








**(கே.வசந்தன்)**

கிராமிய மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக குளங்கள், கிராமங்கள் மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் வவுனியாவில் தானியங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நீர்பாசன அமைச்சின் கீழ் குளங்கள், கிராமங்களின் மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் கிராமிய மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக பயிர்ச் செய்கைக் கான தானியங்கள் வழங்கும் வேலைத் திட்டம் நாடு முழுவதும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், வவுனியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு தானியங்கள் வழங்கும் நிகழ்வு வவுனியா இலுப்பையடி பகுதியில் அமைந்துள்ள கோவில்குளம் கமநல அபிவிருத்தி நிலையத்தல் நேற்று இடம்பெற்றது.

இத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட குளங்களின் கீழான பயிர்ச் செய்கைக்காக கச்சான், கௌப்பி, பயறு, உழுந்து என்பன வழங்கப் படவுள்ளன. அதில் முதல் கட்டமாக கோவில்குளம் கமநல அபிவிருத்தி நிலையத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சமனங்குளம் பகுதியைச் சேர்ந்த 9 விவசாயிகளுக்கு கௌப்பி பயிர்ச் செய்கைக்காக விதைக் கௌப்பி வழங்கி வைக்கப்பட்டதுடன், பயிர்ச் செய்கை தொடர்பான ஆலோசனை வழிகாட்டல்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் கோவில்குளம் கமநல அபிவிருத்தி நிலையப் பொறுப்பதிகாரி திருமதி காஞ்சனா, கமநல அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள், நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.


# திருமலையில் வெள்ளியன்று கடாட்சம் நூல் வெளியீடு..!

**(ஏ.எச்.ஹஸ்பர்)**

சம்பூர் தமிழ்க்கலாமன்றத்தின் ஒழுங்கமைப்பில் "கடாட்சம" நூல் வெளியீடும் இலக்கியப் பணிக்கான பாராட்டு நிகழ்வும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.15 மணிக்கு திருகோணமலை பொது நூலக மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இவ் நிகழ்வு சம்பூர் தமிழ்க்கலாமன்றத்தின் தலைவர் மருத்துவர் அ.சதீஸ்குமார் தலைமையில் நடைபெறும்.

மங்கல விளக்கேற்றல், இறைவணக்கம், வரவேற்புரை, நூல் நயவுரை, நூல் வெளியீடு, கருத்துரைகள், பாராட்டு நிகழ்வு என்பனவும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# அம்பாறையில் சில வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் நேற்றுப் பணிப்பகிஷ்கரிப்பு

## திருக்கோவில் வைத்தியசாலை மருத்துவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து நடவடிக்கை




**(பாறுக் ஷிஹான்)**

திருக்கோவில் ஆதார வைத்தியசாலை வைத்தியர்களின் பணிப் பகிஷ்கரிப்பிற்கு ஆதரவாக அம்பாறை மாவட்டத்தின் சில வைத்தியசாலைகள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளன.

நேற்று சாய்ந்தமருது, காரைதீவு, ஒலுவில், அட்டப்பளம், நிந்தவூர் உள்ளிட்ட வைத்தியசாலைகளில் பணியாற்றும் வைத்தியர்களே இவ்வாறு பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் அம்பாறை, திருக்கோவில் வைத்தியசாலைக்கு எதிராக பொதுமக்கள் சிலர் ஒன்று கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். வைத்தியசாலைக்குச் சேதமும் விளைவிக்கப்பட்டிருந்தது.

இதனால் அங்கு பணியாற்றிய வைத்தியர்கள் தாம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளனர் எனத் தெரிவித்து, தாங்கள் தங்கள் கடமையை உரிய முறையில் மேற்கொள்வதற்குப் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் கோரி இவ்வாறு பணிப்பகிஸ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை 11 ஆம் திகதி திருக்கோவில் மெதடிஸ்த மாகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டு போட்டியை முன்னிட்டு மரதன் இடம்பெற்றது. அந்த மரதன் ஓட்டப் போட்டியில் பங்குபற்றிய திருக்கோவில் 3ஆம் பிரிவு துரையப்பா வீதியைச் சேர்ந்த 16 வயதுடைய ஜெயக்குமார் விதுர்ஜன் என்ற மாணவன் மயங்கிவீழ்ந்தார்.

மயங்கி வீழ்ந்த மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இச் சம்பவத்தையடுத்து திருக்கோவில் ஆதார வைத்தியசாலையின் கவலையீனத்தால் அந்த மாணவன் உயிரிழந்தான் எனக் குற்றம்சாட்டு தெரிவித்து வைத்தியசாலைக்கு முன்னால் ஒன்று திரண்ட பொது மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் வைத்தியசாலை மீது கல்வீச்சு தாக்குதல் நடாத்தியதில் கட்டடத்தின் பல ஜன்னல் கண்ணாடிகள் தேசமடைந்தன. வைத்தியசாலைப் பெயர் பலகையும் உடைத்து சேதப்படுத்தப்பட்டது. அதனால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

இதனையடுத்து பொலிஸார், விசேடஅதிரடிப்படையினர் வரவழைக்கப்பட்டு பலத்த பாதுகாப்பு நடவடிக்கை இடம்பெற்ற நிலையில் ஆர்ப்பாட்டகாரர்கள் 5 மணித்தியால ஆர்ப்பாட்டத்தையடுத்து அங்கிருந்து வெளியேறினர்.

அதனை தொடர்ந்து உயிரிழந்த மாணவன் அதிக வெப்பம் காரணமாக உயிரிழந்தான் எனப் பிரேத பரிசோதனையில் கண்டறியப்பட்டதுடன், அவரின் உடல் கூறுகள் அரசபகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டன. சடலம் கடந்த 12 ம் திகதி உறவினரிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிலையில் அந்த வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்கள் தமக்குப் பாதுகாப்பு இல்லை எனவும், அரச சொத்தான வைத்தியசாலைக் கட்டடத்திற்குச் சேதம் விளைவித்தவர்களைக் கைது செய்யுமாறு கோரியும் கடந்த 10 நாள்களுக்கு மேல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் வைத்தியசாலை செயற்பாடுகள் அனைத்தும் செயழிழந்துள்ளன.

இதனையடுத்து வைத்தியசாலைக்கு சேதம் விளைவித்த 50 பேரை இனங்கண்டு கொண்ட பொலிஸார் பெண் ஒருவர் உட்பட 6 பேரை கைது செய்து நீதிமன்றில் ஆஜரபடுத்தியதை அடுத்து எதிர்வரும் 4 ஆம் திகதி வரையுமான 14 நாள்கள் அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதிவான் உத்தர விட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# வலி. வடக்கில் விடுவிக்கப்பட்ட காணிகளை பொறுப்பேற்பது தொடர்பில் இன்று கூட்டம்

(ந.லோகதயாளன்)

வலி. வடக்கில் அண்மையில் ஜனாதிபதியால் விடுவிக்கப்பட்ட 234 ஏக்கர் நிலம் தொடர்பில் இன்று ஒட்டகப்புலத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவினால் இம்மாதம் 22 ஆம் திகதி வலி. வடக்கிலே 234 ஏக்கர் நிலம் விடுவிக்கப்படுவதற்கான பத்திரம் வழங்கப்பட்டபோதும் அந்த நிலங்கள் இன்றுவரை உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவில்லை. அவ்வாறு உரிமையாளர்களிடம் கையளிக்கப்படாத நிலங்கள் தொடர்பிலேயே இன்று மாலை 4 மணிக்கு ஓட்டகப்புலம் மாதா கோயிலில் விசேட கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெறவுள்ள இக்கலந்துரையாடலில் மாவட்டச் செயலகத்தினர், படையினர், பிரதேச செயலாளர், விவசாயத் திணைக்களத்தினர், நில உரிமையாளர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இன்றைய கூட்டத்தில் விடுவிக்க இணக்கம் தெரிவித்து மாவட்ட அரச அதிபரிடம் விடுவிப்புப் பத்திரம் வழங்கிய நிலத்தை அந்த நிலத்தின் உரிமையாளர்களிற்கு பெற்றுக்கொடுப்பது, அந்த நிலத்தை உடன் பயனபாட்டிற்கு உட்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளது.



# மாவட்ட செயலாளர்களினூடாக பெரும்போக நெல் கொள்வனவு

பெரும்போக நெல் கொள்வனவை மாவட்ட செயலாளர்களினூடாக மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டரிசி நெல் ஒரு கிலோகிராம் 105 ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் மாவட்ட செயலாளர்களைத் தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றுள்ளது.

# 17 ரக மருந்துகளுக்கு நாட்டில் தட்டுப்பாடாம்

நாட்டிலுள்ள வைத்தியசாலைகளில் மேலும் 17 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படாத பல வகையான மருந்துகள் இதில் உள்ளடங்கியுள்ளன என அதன் பிரதி பணிப்பாளர் நாயகம், வைத்தியர் ஜி.விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

பற்றாக்குறையாகவுள்ள மருந்துகளுக்கான மாற்று மருந்துகள் இருக்கின்றன என பிரதிப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.






# கோப் குழுவில் இருந்து ஐவர் மட்டுமே விலகினர்

## நாடாளுமன்ற பேச்சாளர் தகவல்

பொது முயற்சியாண்மைக்கான நாடாளுமன்ற தெரிவுக்குழு எனப் படும் கோப் குழுவில் இருந்து இதுவரை ஐவர் மாத்திரமே உத்தியோகபூர்வ மாக பதவி விலகியுள்ளனர் என நாடா ளுமன்றம் தெரிவித்துள்ளது.

தாங்க பதவி விலகியுள்ளனர் என ஐவர் மாத்திரமே எழுத்து மூலம் அறிவித்துள்ளனர் என அதன் சிரேஷ்ட பேச்சாளரொருவர் குறிப் பிட்டுள்ளார்.

டிலான் பெரேரா, துமிந்த திசா நாயக்க, எரான் விக்கிரமரத்ன, எஸ். எம். மரிக்கார் மற்றும் சரித ஹேரத் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே தமது பதவி விலகல் கடி தங்களைக் கையளித்துள்ளனர் என அந்தப் பேச்சாளர் தெரிவித்துள் ளார்.

இவர்கள் தவிர, அனுர குமார திசா நாயக்க, வசந்த யாப்பா பண்டார, இராசமாணிக்கம் சாணக்கியன், தயா சிறி ஜயசேகர, காமினி வலேபொட, ஹேஷா விதானகே ஆகிய நாடாளு மன்ற உறுப்பினர்கள் தாம் கோப் குழுவில் இருந்து பதவி விலகியுள்ள னர் என நாடாளுமன்றத்தில் அறி வித்துள்ளனர்.

எனினும் அவர்கள் இதுவரை எழுத்துமூலம் நாடாமன்றுக்கு உத்தி யோகபூர்வமாக அறிவிக்கவில்லை எனக் கூறப்படுகின்றது.

எழுத்துமூலம் தெரியப்படுத்தும் வரையில் அவர்களின் பதவி விலகல் செல்லுபடியாகாது என நாடாளுமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

கோப் குழுவின் தலைவராக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வின் ரோஹித அபேகுணவர்தன நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரி வித்து அவர்கள் இவ்வாறு பதவி விலகியுள்ளனர்.

பதவி விலகல் கடிதத்தை சமர்ப் பித்த உறுப்பினர்களுக்கு பதிலாக புதிய உறுப்பினர்களை நியமிக்கு மாறு எதிர்க்கட்சி தலைவர் அலுவல கத்திற்கு அறிவித்துள்ள போதிலும், அது தொடர்பில் இதுவரை பதில் கிடைக் கப்பெறவில்லை என நாடாளுமன்ற சிரேஷ்ட பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

31 உறுப்பினர்களைக் கொண்ட கோப் குழுவில், ஆளுங்கட்சியின் சார்பில் 19 பேரும் எதிர்க்கட்சியின் சார்பில் 12 பேரும் நியமிக்கப்படு கின்றனர்.

சில உறுப்பினர்கள் பதவி விலகி யமையை அடுத்து, ஆளுங்கட்சியின் உறுப்பினர்கள் எண்ணிக்கை பதி னெட்டாகவும் எதிர்க்கட்சி உறுப்பி னர்களின் எண்ணிக்கை எட்டாகவும் குறைவடைந்துள்ளது.

எவ்வாறாயினும், கோப் குழுவின் கூட்டத்திற்கு 5 உறுப்பினர்கள் மாத்திரம் பங்கேற்பது போதுமானது என நாடாளுமன்றம் சுட்டிக்காட்டி யுள்ளது.




# அரச ஊழியர்களுக்கான சம்பளம் 10 ஆம் திகதி

அரச ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்ட 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவு உள்ளடங்கிய ஏப்ரல் மாத சம்பளம், எதிர் வரும் 10 ஆம் திகதி வழங்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ஓய்வு பெற்றவர்களுக்கு வழங்கப்படும் 2,500 ரூபா கொடுப்பனவு உள்ளடங்கிய ஏப்ரல் மாத ஓய்வூதிய சம்பளக் கொடுப்பனவும் எதிர்வரும் 10 ஆம் திகதி வழங்கப்படுமென இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, சம்பளப் பிரச்சினையை முன்வைத்து கடுமையான தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்க ஆசிரியர் - அதிபர் சங்கம் தீர்மானித்துள்ளது.



# குறைந்தபட்ச சம்பளம் தொடர்பான தேசியச் சட்டத்தை திருத்த அனுமதி

தேசிய குறைந்தபட்ச சம்பளச் சட்டத்தை திருத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தேசிய மாதாந்த சம்பளம் 5,000 ரூபாவினாலும் நாளாந்த சம்பளம் 200 ரூபாவினாலும் அதிகரிக்கப் படவுள்ளது.

இதற்கமைய, தேசிய மாதாந்த சம்பளம் 12,500 ரூபா விலிருந்து 17,500 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.

தேசிய நாளாந்த சம்பளம் 500 ரூபாவிலிருந்து 700 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.

தேசிய தொழிலாளர் ஆலோசனை சபையின் பரிந் துரைகளுக்கமைய நியமிக்கப்பட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை பிரதிநிதித்துவப் படுத்தும் தொழிற்சங்கங்கள் மற்றும் தொழில்தருநர் களை உள்ளடக்கிய முத்தரப்பு உப குழுவின் பரிந்துரை களுக்கமைய இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட் டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 27.03.2024




இன்று அனுகூலமான நாளாக இருக்கும். இன்று சிறந்த பலன்கள் காணப்படும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்பு உள்ளது. முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள்.

உங்களிடத்தில் காணப்படும் அசாதாரணமான திறமை காரணமாக பணியிடத்தில் சிறப்பான வளர்ச்சி காணப்படுகின்றது. இதன் மூலம் உங்கள் திறமைக்கு பாராட்டுக் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் ஒட்டுதலை வளர்த்துக் கொண்டு ஒட்டி உறவாடுவதன் மூலம் நல்லுறவை பராமரிக்கலாம். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும். உங்கள் கையிலுள்ள பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் தன்னம்பிக்கை அதிகமாக காணப்படும். முடிவுகள் எடுப்பதில் திடமாக இருப்பீர்கள்.

பதவி உயர்வு வகையில் பாராட்டு கிடைக்கும். உங்கள் திறமை மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொண்டு இருவரும் மகிழ்வீர்கள். வெளியிடங்களுக்கு சென்று உங்களின் தரமான நேரத்தை கழிப்பீர்கள்.

உங்கள் கடின உழைப்பின் மூலமாக ஊக்கத்தொகை அல்லது சலுகை வகையில் கூடுதல் பண வரவு கிடைக்க வாய்ப்புள்ளது.

நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உடல் ஊனமுற்றோர் அல்லது நோயாளிகளுக்கு தொண்டு செய்வதன் மூலம் இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ளலாம். உங்கள் இலக்குகளை அடைவதில் தாமதம் ஏற்படும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். சவாலான சூழல்களை நீங்கள் சமாளிக்க வேண்டும்.

குடும்ப பிரச்சினை பற்றி உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். இதனால் உறவில் முரண்பாடு ஏற்படும்.

பணம் அதிக அளவில் காணப்படாது. மருத்துவ செலவுகள் தவிர்க்க முடியாததாக இருக்கும்.

இன்று தோல் எரிச்சல்கள் காணப்படலாம். எண்ணெய் மற்றும் கார உணவுகளை தவிர்க்கவும்.




இன்று சில சௌகரியங்களை இழக்க நேரலாம். இன்று கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் தந்தையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். ஆன்மீக ஈடுபாடு அமைதியை அளிக்கும்.

உங்கள் பணிகளை ஒழுங்கமைத்து பணியாற்ற சிறப்பாக திட்டமிட வேண்டும். நீங்கள் சிறந்த பலன் பெற இன்று கவனமுடன் பணியாற்ற வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சிகரமாக நடந்துகொள்வீர்கள். இந்தப் போக்கு உறவின் புரிந்துணர்வை பாதிக்கும்.

உங்கள் கடின உழைப்பிற்கு ஊக்கத்தொகை அல்லது சலுகை வகையில் பணம் கிடைக்கும். என்றாலும் சேமிக்கும் ஆற்றல் குறைந்து காணப்படும்.

அதிக வேலை காரணமாக பதட்டமும் மூட்டுகளில் வலியும் ஏற்படலாம்.




உங்களின் சிறந்த தகவல் பரிமாற்ற திறன் மூலம் நீங்கள் சாதிப்பீர்கள். இன்று நம்பிக்கையான மனநிலையும் உறுதியும் உங்களிடம் காணப்படும். முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

உங்கள் சிறந்த பணிக்கு நற்பெயர் பெறுவீர்கள். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். உங்கள் தனித்த திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாக உங்கள் உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

உங்கள் கடின உழைப்புக்கு ஊக்கத்தொகை கிடக்கும். இது உங்களுக்கு மிகுந்த திருப்தியை அளிக்கும்.




இன்றைய சவால்களை எதிர்கொள்ள நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும். மகிழ்ச்சியாக இருக்க இசை மற்றும் பொழுதுபோக்கு விஷயங்களில் ஈடுபடுங்கள்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் சில போராட்டங்களை எதிர்கொள்வீர்கள். அதிகப் பணிகள் காணப்படும். தவறுகள் நேராமல் இருக்க பணிகளை திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் திருப்திகரமான உறவுநிலை காணப்படாது. வேறுபாட்டைகளைய இருவரும் மனம் திறந்து பேசுவது நல்லது.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். செலவுகள் அதிகமாக காணப்படும்.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரும்.




இன்று சவால்கள் நிறைந்திருக்கும். உங்கள் வளர்ச்சியில் தடைகளை சந்திப்பீர்கள். உங்கள் இலக்குகள் நோக்கி செயல்பட வேண்டும். பெரிய அளவில் சிந்தனையை ஏற்படுத்திக் கொண்டு விரும்பிய பலன்களை அடைய வேண்டும்.

பணியில் சிறிது மந்தநிலை காணப்படும். உங்கள் பணிகளை திறமையாக ஆற்றுவதில் தைரியம் இழந்து காணப்படுவீர்கள். நம்பிக்கையுடன் செயல்பட்டு உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுங்கள்.

உங்கள் பேச்சில் கட்டுப்பாட்டை இழக்க வாய்ப்புள்ளது. எனவே உங்கள் துணையுடனான அணுகுமுறையில் பொறுமை தேவை. நட்புடன் பழக முயலவும்.

பூர்வீக சொத்து மூலமாக பண வரவு ஏற்படும். என்றாலும் உங்கள் சேமிப்பு நிலை உயர்வது கடினம்.




உங்கள் வளர்ச்சியில் தடைகள் காணப்படும். இன்று வெற்றி பெறுவதற்கு திட்டமிட வேண்டும். பதட்டப்படாமல் கட்டுப்பாட்டுடன் உங்கள் செயல்களை செய்ய வேண்டும்.

உங்கள் கடினமான பணிகளைகூட எளிதாக முடிப்பீர்கள். விரும்பி பணியாற்ற முயல்வதன் மூலம் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலும்.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். வெளியிடங்களுக்கு அழைத்துச் சென்று சமாதனப் படுத்துங்கள். இதனால் இருவருக்குமிடையிலான உறவு மேம்படும்.

வங்கியில் போதுமான பண இருப்பு பராமரிக்க இயலாது. தவிர்க்க முடியாத செலவுகள் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 27.03.2024




இன்று நீங்கள் உயர்ந்த நிலையை அடைவீர்கள். உங்கள் திறமைகளை வெளிபடுத்த நம்பிக்கையான வாய்ப்புகள் கிடைக்கும். நீங்கள் உறுதியுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் சகபணியாளர்களின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்துக்கு முன்பே முடித்து விடுவீர்கள்.

உங்கள் துணையுடன் அமைதியாகப் பழக வேண்டும். இதன் மூலம் இருவரின் உறவுப் பிணைப்பு வலுப்படும்.

நிதிநிலை மகிழ்ச்சிகரமாகவும் பாதுகாப்பாகவும் காணப்படும். உங்கள் பாதுகாப்பிற்கு தேவையான பணம் கிடைக்கும்.

உங்களிடம் மிகுந்த ஆற்றல் காணப்படும். இதன் காரணமாக சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்றைய நாள் சாதகமான பலன்களை அளிக்காது. இன்று வளர்ச்சி காண கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் வளர்ச்சியை பாதிக்கும் வகையில் தகவல் பரிமாற்ற பிரச்சினை காணப்படும். பதற்றத்தை தவிர்க்கவும்.

பணியிடச் சூழல் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் மகிழ்ச்சி கரமாக இருக்காது. பணியில் வளர்ச்சி காண கூடுதல் முயற்சி தேவை.

உங்கள் துணையிடம் சிறிய விஷயங்களையும் பெரிதாக எடுத்துக் கொள்ள முனைவீர்கள். இதனால் இருவரிடையிலான உறவில் மகிழ்ச்சி குறையும்.

நிதி வளர்ச்சி மகிழ்சிகரமாக இருக்காது.வரவுக்கும் செலவுக்குமான சமநிலையை பராமரிப்பது கடினமாக இருக்கும்.




இன்று நீங்கள் மும்மரமாக செயல்படும் சூழ்நிலை காணப்படும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

பணியிடத்தில் நற்பெயர் எடுக்க வாய்ப்புள்ளது. கடினமான பணிகளையும் இன்று எளிதாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும். இதன் மூலம் இருவரிடையே நல்லுறவும் மகிழ்ச்சியும் ஏற்படும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். பணம் அதிகமாக இருக்கும். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று நிறைந்த ஆற்றலும் சிறந்த ஆரோக்கியமும் காணப்படும். நீங்கள் திடமாக இருப்பீர்கள்.




இன்றைய கடினமான சூழ்நிலைகளை அமைதியாக சமநிலை உணர்வுடன் சமாளித்தால் சிறந்த பலன் கிடைக்கும். இன்று அனுசரித்து நடந்து கொள்ளவேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

உங்கள் கீழ் பணிபுரிபவர்களிடம் மோதல்கள் காணப்படும். சுமூகமாக பணியாற்ற உங்கள் பதற்றத்தை கட்டுப்படுத்த வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை தவிருங்கள். இதன் மூலம் உறவில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். பணத்தில் ஸ்திரத்தன்மை பாதுகாக்க சிக்கனப்படுத்தி பணத்தை சேமிக்க வேண்டும்.

ஆரோக்கியமாய் இருக்க ஆரோக்கிய உணவை உண்ண வேண்டும்.








# மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கு இந்திய - இலங்கைக் கூட்டுச் செயற்குழு கூடுகின்றது

மீனவர் பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்காக இந்திய – இலங்கைக் கூட்டுச் செயற்குழு விரைவில் கூடவுள்ளதாக இந்திய மத்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

Fishermen Care என்ற தனியார் அமைப்புத் தாக்கல் செய்த பொதுநல வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, மேற்படி மனுவிற்கு பதிலளிக்கும் வகையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் பிரமாணப் பத்திரத்தில் இந்திய மத்திய அரசாங்கம் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் அல்லது டிசம்பரில் மீன்பிடி தொடர்பான இந்திய – இலங்கை கூட்டு செயற்குழுவின் ஆறாவது கூட்டத்தை நடத்த முன்மொழியப்பட்ட போதிலும், உள்நாட்டு பிரச்சினைகளால் அந்தத் திட்டம் பலனளிக்கவில்லை என இந்திய மத்திய அரசாங்கம் சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இந்திய வெளியுறவு அமைச்சு இந்தக் கூட்டத்தை கூடிய விரைவில் நடத்த நடவடிக்கை எடுத்து வருவதாக இந்திய மீன் வளத்துறை அமைச்சு நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இரு நாட்டு மீனவர்களுக்கு இடையே நீண்டகாலமாக நிலுவையில் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில், 2016 ஆம் ஆண்டு இடம்பெற்ற அமைச்சர்கள் மட்ட மாநாட்டில் எட்டப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய, இந்திய – இலங்கை கூட்டுச் செயற்குழு உருவாக்கப்பட்டதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, 2017-2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழகத்தின் பாரம்பரிய மீனவர்களுக்கு இழுவைமடிப் படகுகளுக்குப் பதிலாக 750 ஆழ்கடல் மீன்பிடி படகுகளை கொள்வனவு செய்ய உதவியாக தமிழக அரசாங்கத்திற்கு மத்திய அரசாங்கம் 300 கோடி இந்திய ரூபாவை விடுவித்தமையும் இதன்போது நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

ஆழ்கடல் மீன்பிடியை ஊக்குவிக்கும் வகையில், இராமேஸ்வரம் குந்துகால் பகுதியில் மீன்பிடி இறங்கு தளமொன்றை அமைக்கவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்திய மீனவர்கள் சர்வதேச கடல் எல்லையை தாண்டுவதைத் தடுக்கும் வகையிலான நடவடிக்கைகளை இந்திய கடலோரக் காவல் படையினர் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றனர் எனவும், இந்திய மத்திய அரசாங்கம் தாக்கல் செய்துள்ள பதில் சத்தியக்கடதாசியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பதில் சத்தியக்கடதாசியை ஆராய்ந்த நீதிபதிகள், பொதுநல வழக்கினை ஜுன் 11 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தனர்.

# ஒக்டோபர் 17 இற்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல் நடக்கும்

## வஜிர அபேவர்தன தகவல்

ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் ஒக்டோபர் 17 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

காலியில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே, அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அரசமைப்பிற்கு அமைவாக, ஒக்டோபர் 17 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனிடையே, ஒக்டோபர் மாதத்தின் முதல் வாரத்தில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் எனக் கொழும்பு ஊடகம் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டிருந்தது.

திட்டமிட்டவாறு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என ஜனாதிபதி தனக்கு நெருக்கமானவர்களிடமும் கடந்த இரண்டு அமைச்சரவைக் கூட்டங்களிலும் தனது கருத்துகளை தெரிவித்திருந்தார் என அந்த ஊடகம் செய்தி வெளியிட்டிருந்தது.

பொதுத் தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதியை இணங்க வைக்க பஸில் ராஜபக்ஷ மேற்கொண்ட முயற்சிகளை தோல்வியடையச் செய்து, ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# சென்னைக்கு இரண்டாவது வெற்றி





ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்திலும் வெற்றி பெற்ற சென்னை சூப்பர் கிங்ஸ், தனது இரண்டாவது வெற்றியைப் பதிவு செய்தது.

இந்த ஆட்டத்தில் சென்னை – குஜராத் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற குஜராத், பந்து வீச்சைத் தேர்வு செய்தது. அதன்படி முதலில் ஆடிய சென்னை அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 206 ஓட்டங்களைக் குவித்தது.

அந்த அணி சார்பாக துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக துபே 51, ரச்சின், ருதுராஜ் ஆகியோர் தலா 46 ஓட்டங்கள் சேர்த்திருந்தனர்.

பின்னர் 207 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கு நோக்கிக் களமிறங்கிய குஜராத் அணி, தொடக்க வீரரான கில்லை (8) விரைவாக இழந்தது.

பின்னர் சாய் சுதர்சன் களமிறங்கினார். இவர் சாஹாவுடன் இணைந்து சிறப்பாக விளையாடி னார்.

சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய சாஹாவுக்கு பௌன்ஸர் பந்தை வீசி தலையில் அடிபட வைத்த தீபக் சாஹர், அடுத்த பந்திலேயே அவரது (21) விக்கெட்டை வீழ்த்தினார். அடுத்து வந்த விஜய் சங்கர் (12), மில்லர் (21) ஆகியோர் ஓரளவுக்கு ஈடுகொடுத்து நடையைக் கட்டினர்.

மறுமுனையில் பொறுப்புடன் விளையாடிய சாய் சுதர்சன் 37 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் வெளியேற குஜராத் அணி, 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 143 ஓட்டங்களை மாத்திரமே சேர்த்தது.

இதனால் 63 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சென்னை வெற்றி பெற்றது.

சென்னை அணி சார்பாக பந்துவீச்சில் தீபக் சாஹர், தேஷ்பாண்டே, ரஹ்மான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக சென்னையின் துபே தெரிவானார்.

இந்த ஆட்டத்தில் வென்ற சென்னை அணி , தனது இரண்டாவது வெற்றியைப் பதிவு செய்து, 4 புள்ளிகளுடன் புள்ளிப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

### ஐ.பி.எல்.-2024 நிலைவரம் (26-03-2024)

| நிலை | அணிகள் | போ | வெ | தோ | ச.நி | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | சென்னை | 2 | 2 | 0 | - | - | 4 | 1.979 |
| 02 | ராஜஸ்தான் | 1 | 1 | 0 | - | - | 2 | 1.000 |
| 03 | கொல்கத்தா | 1 | 1 | 0 | - | - | 2 | 0.200 |
| 04 | பஞ்சாப் | 2 | 1 | 1 | - | - | 2 | 0.025 |
| 05 | பெங்களூர் | 2 | 1 | 1 | - | - | 2 | -0.180 |
| 06 | குஜராத் | 2 | 1 | 1 | - | - | 2 | -1.425 |
| 07 | ஹைதராபாத் | 1 | 0 | 1 | - | - | 0 | -0.200 |
| 08 | மும்பை | 1 | 0 | 1 | - | - | 0 | -0.300 |
| 09 | டில்லி | 1 | 0 | 1 | - | - | 0 | -0.455 |
| 10 | லக்னோ | 1 | 0 | 1 | - | - | 0 | -0.1000 |

குறிப்பு: போ-போட்டி | வெ-வெற்றி | தோ-தோல்வி | ச.நி. - சமநிலை
மு.அ. - முடிவற்றது | பு - புள்ளி | ஓ.ச.- ஓட்ட சராசரி